வேளாண் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் / திட்டங்கள்!

பொதுமக்களிடம் கருத்துக்கேட்பு! அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 5-
வேளாண் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் / திட்டங்கள் குறித்து பொதுமக்களின் கருத்து கேட்பு குறித்து அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

மண்ணைப் பொன்னாக மாற்றும் நம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்து அவர்களது வாழ்வை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2021-2022-ஆம் ஆண்டு முதல் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை ஆண்டுதோறும் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. எதிர் வரும் 2025-26-ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் தனி நிதிநிலை அறிக்கையானது ஐந்தாவது முறையாக வரும் மார்ச்-15ஆம் நாள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளது. இதன் பொருட்டு, இந்த நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்ய, பிரத்தியேகமாக உழவர் செயலியில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது, மேலும் tnagribudget2025@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும் வேளாண் நிதிநிலையில் சேர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் தங்களது கருத்துக்களைப் தெரிவிக்குமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தொகுதியில் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் 72வது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக சீர்மரபினர் நலவாரியத் துணைத் தலைவர் இராசா அருண்மொழி ஏற்பாட்டில் அயன்கொல்லங்கொண்டான் ஊ.ஒ.தொ.பள்ளி, அயன்கொல்லங்கொண்டான் அரசு உயர்நிலைப்பள்ளி, இராஜபாளையம் நகராட்சி 10 வது வார்டு தொடக்கப்பள்ளி, இராஜபாளையம் நகரம் ரோணுகாதேவி பள்ளி, சஞ்சீவிநாதபுரம் தொடக்கப்பள்ளி, ஆகிய 5 பள்ளிகளில் 750 மாணவ செல்வங்களுக்கு மதிய உணவாக பிரியாணி வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. , நகர்மன்றத் தலைவர் பவித்ரா ஷியாம், நகரச் செயலாளர்கள், இராமமூர்த்தி, மண்டராஜா, ஜெகதீஸ்வரி, உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர்கள், மாவட்ட தொண்டரணி, கருப்பழகு, முன்னாள் நகர துணைச் செயலாளர் சரவணன், ஒன்றிய துணைச் செயலாளர் ஜெயந்தி, சேத்தூர் பேரூர் செயலாளர் சிங்கம்புலி அண்ணாவி, கழக சார்பு அணி நிர்வாகிகள், உதயா மன்ற நிர்வாகிகள் சேத்தூர் சண்முகசுந்தரம், கலைச்செல்வன், முனியராஜ், கொல்லங்கொண்டான் சிவா, மாரிமுத்து மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்க துணைத் தலைவர்

கவிஞர் நந்தலாலா மறைவு!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, மார்ச் 5-
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் துணைத் தலைவரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினருமான கவிஞர் நந்தலாலா (வயது 69) அவர்கள் நேற்று (04.03.2025) உடல் நலக்குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மனவருத்தம் அடைந்தேன்.

அன்னாரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, அவரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

சைதை மேற்கு: மாவட்டப் பிரதிநிதி – மறைந்த

கிண்டி ஆர்.எல்.செல்வம் திருவுருவப்படம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறக்கிறார்!

ஆர்.எஸ். பாரதி – அமைச்சர்கள் க.பொன்முடி – எ.வ.வேலு – கே.ஆர்.பெரியகருப்பன் – கீதாஜீவன் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 5-
சைதை மேற்கு மாவட்ட பிரதிநிதி மறைந்த கிண்டி ஆர்.எல்.செல்வம் நினைவேந்தல் நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் திருவுருவப் படத்தை திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்துகிறார். ஆர்.எஸ். பாரதி, அமைச்சர்கள் க. பொன்முடி., எ.வ.வேலு, கே.ஆர்.பெரியகருப்பன், கீதாஜீவன், தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., சட்ட மன்ற உறுப்பினர்கள் ப. தாயகம்கவி, மயிலை த.வேலு, ஜே.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதி காலஞ்சென்ற கிண்டி ஆர்.எல்.செல்வம் அவர்களின் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வு சைதாப்பேட்டை பாலாஜி தெருவில் இன்று (05.03.2025 புதன்கிழமை) மாலை 6 மணியளவில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக்குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும் பதி

மூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரை ராஜ் ஆகியோர் முன்னிலையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அண்ணாரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்துகிறார்.

மேலும் இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சமூக நலத்துறை அமைச்சர் கீதாஜீவன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், அன்பகம் கலை, பொங்கலூர் பழனி சாமி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., மயிலை த.வேலு எம்.எல்.ஏ., ஜே.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா, பூச்சி முருகன், கருணாகிட்டு, திரைப்பட இயக்குநர் ஆர்.பாண்டியராஜன, திரைப்பட நடிகர் கு.ஞானசம்தம், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், சைதை மா.அன்பரசன், மின்னல் கந்தப்பன், பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், கலை, இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, வட்ட கழக செயலாளர்கள்எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், ஆர்.கிருஷ்ண குமார், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன் உள்ளிட்ட மாவட்ட பிரதிநிதி கள், அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இவ்வாறு 142வது (அ) வட்ட கழக பொருளாளரும், கிண்டி ஆர்.எல்.செல்வம் அவர்களின் சகோதரருமான ஆர்.எல்.காந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குவைத் நாட்டில் புதுகை அருட்செல்வன் தலைமையில் பஷீர் அகமது சிந்தா பக்கீர் முன்னிலையில் கழகத் தலைவர் முதல்வர் திராவிட மாடல் நாயகன் தளபதியாரின் 72 ஆவது அகவை தின விழா அனைவருக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் திராவிடர் கழகம் சித்தார்த்தன் , விடுதலை சிறுத்தைகள் மகிழன் செல்லதுரை , தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தமிழன் சாகுல் ,உதவும் கரங்கள் மஜீத் ,திராவிட பெட்டகம் ஆலஞ்சியார் மூத்த முன்னோடிகள் ஆறுமுகம் , சிக்கந்தர் ,சபிக் கான் ,ஜியாவுதீன் , நாகூர் உடன்பிறப்புக்கள் செந்தில் முருகன், தமிழ்ச்செல்வன் ,தளபதி பிரபு , சாத்அன்வர் , மீரான் , கணேஷ் ,ஜாபர் சாதிக் ,பிரகாஷ் ,செந்தில் ராஜா , அப்பாஸ் ,ரஃபீக், கபிலன், ரஹ்மத்துல்லா ,செய்யதுகனி,அஜீஸ் ,ஜான் பாஷா ,அஜித் ,ஹமீது ,கார்த்திக் பாலா புகைப்படக் கலைஞர் பக்ருதீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பு கண்டனக் களப் போராட்டம்!

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, மார்ச் 5-
ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கண்டனக் களப் போராட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து இக்கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்தி மொழி ஆதிக்கத்தை ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் புகுத்துவதை ஒரு நூறாண்டாகத் திராவிட இயக்கம் எதிர்த்துப் போராட்டக்களம் அமைத்து வருகிறது.

தந்தை பெரியார் வழி பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு களம் கண்டு போராடியுள்ளனர். தி.மு.கழகத்தின் இந்த மொழிப் போராட்டம் விடுதலைப் போராட்டத்தையும் விஞ்சுமாறு தமிழ்மொழி விடுதலை பெற நடந்துள்ளது. நடந்த போராட்டத்தில் எண்ணற்ற தமிழர்கள் ஈகம் செய்துள்ளனர். இரு மொழிக் கொள்கை என்பது ஏதோ சந்தர்ப்ப வாய்ப்பால் ஏற்பட்டதல்ல! களப்போரின் உச்சத்தால் கண்ட வெற்றி இருமொழிக் கொள்கை.. இதனை அறியாமல் ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசுவது வேடிக்கையாக உள்ளது.

மொழிப் போராட்டத்தினால் அமைந்த திராவிட இயக்க ஆட்சி இருமொழிக் கொள்கை வழி ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாடு ஆட்சியை நடத்தி வருகிறது. அறிஞர் அண்ணா இருமொழிக் கொள்கையை அறிவித்த போது கூறினார்.

"யான் என்னால் ஆனதைச் செய்து விட்டேன்

தன்னால் ஆனதைச் செய்யட்டும்" - மத்திய அரசு என்றார்

இப்போதுள்ள ஒன்றிய அரசு, தமிழ்நாட்டின் உன்னத முதல்வராகி, அனைத்துத் துறையும் ஏற்றம் பெற, வியக்கத்தக்க ஆட்சி நடத்தி வரும் நம் முதல்வர் மு.க. ஸ்டாலின் பொறுமையைச் சோதிக்குமாறு, இடர்பல செய்து வருகிறது.

இத்தனை ஆண்டுகளுக்குப் பின் இப்போது 'தேசியக் கல்விக் கொள்கை' என்ற ஒன்றைக் கற்பித்து ஒன்றிய அரசு நம்மீது மும்மொழிக் கொள்கையைப் புகுத்தி இந்தி மொழியை தமிழ்நாடு ஏற்றுக் கொள்ள அடாவடித்தனம் செய்கிறது. 2152 கோடி ரூபாய் தமிழ் நாட்டுக் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தரும் உதவியை வழங்காமல் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வம்பு வழக்குப் பேசுகிறார்.

நம் ஆற்றல் மிக்க முதல்வர் எத்தனை ஆயிரம் கோடி கொடுத்தாலும் இந்தி ஆதிக்கத்தை ஏற்கமாட்டோம் என அறைகூவல் விடுக்கிறார். முதல்வர் அவர்களின் உரமிக்க இந்தி ஆதிக்க எதிர்ப்புக்குத் தமிழ் மக்கள் அனைவரும் திரண்டெழுந்து ஆதரவு தருவோம்.

தேசியக் கல்விக் கொள்கைப் பேரால் வரும் தமிழ் நாட்டில் இந்தி திணிப்பை முறியடிக்கத் தமிழ் நாட்டிலுள்ள அனைத்துத் தமிழ் அமைப்புகளும், எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் அனைவரும் திரண்டெழ வேண்டும். நம்மாண்புமிகு முதல்வரின், இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு ஆதரவு தந்திட வேண்டுகிறோம்.

'இருமொழிக் கொள்கையே தமிழகத்திற்கு எப்போதும் வேண்டும். மும்மொழிக் கொள்கை எப்போதும் வேண்டாம்' என ஒன்றிய அரசிற்கு அறிவுறுத்தி நம்முதல்வர் மக்களாட்சி வெற்றிவாகை சூடிட முழக்கமிடுவோம். கண்டனம் தெரிவிப்போம்!

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தைத் திராவிட இயக்கத் தமிழ்ப் பேரவைத் தலைவர் சுப. வீர பாண்டியன் தொடங்கி வைக்கிறார். பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ தலைமை தாங்குகிறார்.

பேராசிரியர் மா. செல்வராசு, தமிழ்த்திரு வி.பி. கலைராசன், காரை. தமிழ்த்திரு. செல்வராசு, கவிஞர் எ.த. இளங்கோ ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கவிச்சிங்கம் கண்மதியன், வழக்கறிஞர் சீ.சா. சிவக்குமார், முனைவர் கருப்பசாமி, பேராசிரியர் யோ.சா. இராசேந்திரன், கவிஞர் ஏர்வாடி இராதாகிருட்டிணன், புலவர் தமிழாளன், பாவலர் ம. கணபதி, பேராசிரியர் தமிழியலன், புலவர் உதயை வீரையன், புலவர் கா. முருகையன், முசுபூர்இரகுமான், பேராசிரியர் ஏழுமலை, த.கு. திவாகரன், புலவர் இராமலிங்கம், வை.மா. குமார், முகம் இளமாறன், க.ச. கலைஅரசன், மதிஅரசு, உமா சுப்பிரமணியன், தன. தமிழரசன், சிந்தை வாசன், வே. தளபதி, திருவள்ளுவன், இலக்குவனார், குடியாத்தம் குமணன், துரைவசந்தராசன், பூவை கோ. சுந்தரம், வானரசன், இரவிதாசன், தில்லை பாட்கர், மணிவண்ணன், செங்கை தாமசு, தண்ணீர்க்குளம்தாசன், வேணு கோபால், லெனின் காவிரிச்செல்வன், த. இராசரத்தினம், ந. பாபு, வியாசை இர. முரளி, தளவை இராசேந்திரன், சோலைதமிழினியன், கவிச்சுரபி சந்திரசேகரன், தாமரைப் பூவண்ணன், நம்மஊர் கோபிநாத், கனக பாரதி, வி. நாகசுந்தரம், வழக்கறிஞர் பாபு, கவிஞர் காளிதாசு, கவிஞர் கண்ணதாசன், செங்கதிர் சண்முகம், பட்டு ராசபாரதி, குமரிச்செழியன், திருவை பாபு, சொர்ணபாரதி, சின்னப்பாத் தமிழர், கருஞ்சட்டை இராசேந்திரன் மற்றும் நூற்றுக்கு மேலான தமிழ் கூட்டமைப்பினர் போராட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கிறார்கள்.

கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம்: வள்ளுவர் கோட்டம் கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை.
நாள் : 10.03.2025 திங்கட்கிழமை, காலை 10 மணி முதல் 1 மணி வரை

அனைவரும் வருகை தந்து ஆதரவு தருமாறு ஒருங்கிணைப்பாளர்கள் :

தமிழ்மாமணி வா.மு.சே. திருவள்ளுவர், மதுரகவி மறத்தமிழன்., இசைப்பாலவர் நா. நந்தன் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கவிஞர் மு. வீரமுத்து நன்றி கூறுகிறார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை ஆற்றுகிறார்!

சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் வி.இ.மதியழகன் வேண்டுகோள்!

சென்னை, மார்ச். 5
சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிச் செயற்குழுக் கூட்டம் (05.03.2025 புதன்கிழமை) மாலை 4.30 மணி அளவில், பகுதி அவைத் தலைவர் எஸ். ஜானகிராமன் தலைமையில் ஈஞ்சம்பாக்கம், கடற்கரை பகுதியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு 194 (அ) வட்டக் கழகச் செயலாளர் எஸ்.கர்ணா, மா. மகேஷ்வரன், ஜி.விஜய குமார், வி.எஸ்.சுதா, எம். பாஸ்கரன், கி.சத்திய வேலன், கே.வி.சாந்தப்பன், பி.எஸ்.ஆறுமுகம், கே. குமார், ஏ.கே.ஆனந்த், க. ஏகாம்பரம், டி.சீனிவாசன், பி.என்.ஜோதி, 194 வது வார்டு மாமன்ற உறுப்பினர் விமலா கர்ணா ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், பாலவாக்கம் க.சோமு, பாலவாக்கம் த. விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், எஸ். வி.ரவிச்சந்திரன், ஜி.வெங்கடேசன், எம்.கே.ஏழுமலை, எஸ்.ஏ.ஹரிகிருஷ்ணன், ப.ரவி, ரத்னா லோகேஷ்வரன், கா.வி. தியாகராஜன், ஜெ.இ.பாண்டியன், பா.அருண்குமார், எம்.பார்த்திபன், த.விஜய பாலன் மற்றும் பகுதிக்கு உட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டு கொள்கொள்கிறேன்.

பொருள்: 09.03.2025 அன்று துணை முதல்வர் வருகை மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் வி.இ.மதியழகன் எம்.சி. தெரிவித்துள்ளார்.

நாளை 6ஆம் தேதி பிற்பகல் நடைபெறுகிறது

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நாளை (6.3.2025) வியாழன் பிற்பகல் 3.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் - கண்டோன்மெண்ட் ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி,எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. மாபெரும் மக்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கிட கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் வருகிற 10.3.2025 மற்றும் 11.3.2025 ஆகிய தேதிகளில் நம்முடைய மாவட்டத்திற்கு வருகை.
2. கழக வளர்ச்சிப் பணி.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்,**
செயலாளர்,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அன்பில் தர்மலிங்கம்

மார்ச் 5 (1993)

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களில் பங்கு கொண்டதன்றி தி.மு.க. உருவானபோது கழகத்தில் முக்கிய பங்கேற்று பணியாற்றினார்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

திருச்சி மாவட்டச் செயலாளராக 1950 முதல் 1972 வரை பணியாற்றினார்.

திருச்சி மாவட்டத்தில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. 2வது மாநில மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக பணியாற்றியவர்.

மாநாட்டிற்கு கழகத்தவரை அண்ணா வருமாறு அழைப்பு விடுக்கும்போது அதற்காக திராவிட நாடு இதழில் எழுதிய தம்பிக்கு மடலில் "அன்பில் அழைக்கிறார்" என்றே தலைப்பிட்டு எழுதினார்.

சட்டமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

தலைமைக் கழகச் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் 1986ஆம் ஆண்டு "பெரியார் விருது" வழங்கி சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.